DITTO WS

Reg. No. : ....................................

Name : ........................................

**FY-20**

# FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2020

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் 1 வீதம்** **(5 × 1 = 5)**

1. புதுக் கவிதையைத் தோற்றுவித்தவர்.
   (அ) டி. எஸ். எலியட் (ஆ) வால்ட் விட்மன்
   (இ) எஸ்ரா பவுண்ட் (ஈ) நா. பிச்சமூர்த்தி

2. பாலுமகேந்திரா இயக்கிய ஒரு திரைப்படம்.
   (அ) தண்ணீர் தண்ணீர் (ஆ) தேவதாஸ்
   (இ) அழியாத கோலங்கள் (ஈ) பாசமலர்

3. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைளில் அறநெறியை உணர்த்தும் நூல்.
   (அ) சிலப்பதிகாரம் (ஆ) மணிமேகலை
   (இ) திருக்குறள் (ஈ) சீவகசிந்தாமணி

4. ஓரெழுத்து ஒரு மொழி என்பது
   (அ) ஓரெழுத்து மட்டுமே வந்து பொருள் தருவது
   (ஆ) இரண்டு எழுத்துக்கள் வந்து பொருள் தருவது
   (இ) பொருள் இல்லாத ஒரு எழுத்து வருவது
   (ஈ) மூன்று எழுத்துக்கள் வந்து பொருள் தருவது

5. மதுரைக் காஞ்சியின் பாடு பொருள் யாது ?
   (அ) வறுமை (ஆ) பெருமை
   (இ) நிலையாமை (ஈ) சிறுமை

**6 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 4 வினாக்களுக்கு விடை எழுதவும். மதிப்பெண் 2 வீதம். (4 × 2 = 8)**

6. புதுக் கவிதையின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

7. கீழே தரப்பட்டுள்ள மரபுத் தொடர்களுள் ஏதேனும் இரண்டின் பொருளை விளக்குக.
அ) செவிசாய்த்தல்
ஆ) நாடு நீங்கினார்
இ) கொடிகட்டிப் பறத்தல்

8. பின்வரும் சொற்களுள் அடுக்குத் தொடர் சொற்களை மட்டும் எடுத்து எழுதவும்.
கண்டு கண்டு, கட கட, விடு விடு, வள வள, சடசட

9. செம்மொழித் தகுதிப்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

10. 'திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்'
– இத்தொடரில் அமையும் எழுவாய, பயனிலை சொற்களை எழுதுக.

**11 முதல் 13 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 2 க்கு விடை எழுதவும். மதிப்பெண் 3 வீதம். (2 × 3 = 6)**

11. இயற்கை உணவின் அவசியத்தினை விழிப்புணர்வூட்டும் வகையில் துண்டுப் பிரசுரம் தயார் செய்க.

12. கீழ்க்காணும் பழமொழிகளை விளக்கி எழுதுக.
"யானைக்கும் அடி சறுக்கும்"
"மின்னுவதெல்லாம் பொன்னல்ல"

13. "தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை"
- பாரதிதாசன்
தமிழின் இனிமைக் குறித்து சிறுகுறிப்பு எழுதுக.

**14 முதல் 18 வரையுள்ள வினாக்களில் எவையேனும் 3 க்கு மட்டும் விடை தருக. மதிப்பெண் 4 வீதம். (3 × 4 = 12)**

14. தோல்பாவைக் கூத்தின் தனித் தன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

15. சரியாகப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (அ) | தமிழ்விடு தூது | – | குறுங்காப்பியம் |
| (ஆ) | திருக்குறள் | – | பிரபந்தம் |
| (இ) | தமிழேறு | – | இலக்கணம் |
| (ஈ) | தொல்காப்பியம் | – | அறநூல் |

16. ஃபைசைபர்க்ரைம் புகார்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.
– இதற்கான காரணங்களை எழுதுக.

17. வழக்குச் சொற்களைத் தூய தமிழில் எழுதுக.
"பட்டண வாசம் எனக்கு ஒத்துக்காது. கொஞ்ச நாளாகவே அம்மாவுக்கு உடம்பு சரியில்லாம இருந்திருக்கு, பார்வையும் இல்ல முந்தா நாள் கிணற்றடியில் வழுக்கி விழுந்திட்டார். அவளுக்கு கிராமத்திலேந்து போகவும் மனமில்லை"

18. முக்கியமான நான்கு வலைப் பூக்களின் பெயர்களை எழுதுக.

**19 முதல் 22 வரையுள்ள வினாக்களில் எவையேனும் 3 க்கு மட்டும் விடை தருக. 5 மதிப்பெண் வீதம். (3 × 5 = 15)**

19. பச்சை வயல் என்னும் திரைக்கதையில் வரும் தர்மு என்ற கதாப்பாத்திரம் பண்பு நலன்களை எழுதுக.

20. உங்கள் பள்ளி ஆண்டு விழாவிற்கு வருகை தரும் நாட்டுப்புறக் கலைஞர் ஒருவரிடம் நாட்டுப்புறக் கலைகளின் இன்றைய நிலைக் குறித்துக் கேட்க ஐந்து வினாக்கள் கொண்ட வினா நிரல் தயார் செய்க.

21. பாலுமகேந்திராவின் சினிமாத் துறை அனுபவங்களை விளக்கக் குறிப்பாக எழுதவும்.

22. 'குருவிக்கு வேண்டுகோள்' எனும் கவிதை எழுதிய கவிஞர் ஞானக்கூத்தன் அவர்கள் உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தினைத் துவங்கி வைத்து சிறப்புரையாற்ற வருகிறார். அவருக்கான பாராட்டுரை தயார் செய்க.

**23 முதல் 27 வரையுள்ள வினாக்களில் எவையேனும் 3 க்கு மட்டும் விடை தருக. 6 மதிப்பெண் வீதம். (3 × 6 = 18)**

23. இணையதளம் வழியாகக் கல்வி பயில்வதால் விளையும் பயன்பாடுகளைப் பட்டியலிடுக.

24. "நமக்கிருப்பது போல்
பறவைகளுக்கு
நாடுகளும்
எல்லைகளும் இல்லை
ஆனால்
பறவைகளின் சுதந்திரம்
நம்மிடம் இல்லை"
_ எனும் அப்துல் ரகுமானின் வரிகளை விமர்சனம் செய்க.

25. 'கருத்துப் பரிமாற்றத்தின் ஒரு கருவி மட்டுமே மொழி' எனும் தொடரை மையமாக வைத்து தலையங்கம் தயார் செய்க.

26. உலக சமாதான தினத்தையொட்டி உங்கள் பள்ளி விழிப்புணர்வு முகாமில் பங்கு பெற 'போரினால் ஏற்படும் தீமைகள்' என்ற தலைப்பில் ஓர் சிறு கட்டுரை எழுதுக.

27. "தமிழ் எங்கள் உயிர் என்பதாலே – வெல்லுந்
தரமுண்டு தமிழருக்குப்புவி மேலே
தமழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் – இன்பத்
தமிழ்குன்றுமேல் தமிழ்நாடெங்கும் இருளாம்" – பாரதிதாசன்.

இப்பாடல் அடிகளை நயம் பாராட்டுக. ( சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம், எதுகை நயம்)

**28 முதல் 30 வரையுள்ள வினாக்களில் எவையேனும் 2 க்கு மட்டும் விடை தருக. 8 மதிப்பெண் வீதம். (2 × 8 = 16)**

28. சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் பங்கேற்க 'மனிதனும் இயற்கையும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் :
- இயற்கையோடு இயைந்த வாழ்வு,
- பழங்கால வாழ்க்கை,
- இயற்கையைப் பாதுகாப்பதன் அவசியம்,
- இயற்கைச் சீற்றத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகள்.

29. உங்கள் பள்ளி சமூக இயல் மன்றம் வெளியிடவிருக்கும் மலருக்காக 'நாட்டுப்புற வாழ்வியல் கூறுகள்' என்ற தலைப்பில் விளக்கக் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : நாட்டுப்புற வாழ்வியல் பாடல் வகைகள்,
பழமொழிகள், இயற்கை, மருத்துவம், நம்பிக்கைகள்

30. " மோப்பக் குழையும் அனிச்சமும் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

– எனும் திருக்குறளை மையமாகக் கொண்டு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவிருக்கும் சொற்பொழிவில் பங்கேற்க 'விருந்தோம்பல் அன்றும் இன்றும்' எனும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்க.

குறிப்புகள் : விருந்தின் சிறப்பு, உறவு முறைகள், பழங்கால நிலை,
இன்றைய நிலை, பயன்கள்.

---